## 32 வளையல்விற்றபடலம்

தாருகா வனத்தில் வாழும் முனிவர்கள் தாங்கள் செய்யும் தவ வலிமையால் எதையும் அடையலாம், அதற்கு இறை அருள் தேவையில்லை என்ற எண்ணம் கொண்டிருந்தனர். முனி பத்தினிகளும் தங்கள் கற்பினால் எதையும் சாதிக்கலாம் என ஆணவமுற்றனர். அவர்களின் அறியாமையையும் ஆணவத்தையும் போக்க எண்ணினார் ஐயன்.

திரு ஓட்டை கையில் ஏந்தி, பட்டுக் கோவணம் தரித்து, புலித்தோலை போர்த்தி, திருநீரு அணிந்து அழகிய இளைஞர் வடிவுடன் பிச்சை எடுக்க வீதியில் வந்தார் சிவபெருமான். அவர் வரும் ஓசையைக் கேட்டதுமே அவர் அழகில் மயங்கி தம்மை மறந்த ரிஷிபத்தினிகள் பிச்சையிட வந்தனர்.அவருடைய அழகில் காமமயக்கத்துடன் பிச்சையிட்டனர். காமமயக்கத்தில் உடல் இளைத்ததால் அவர்களின் கைவளையல்கள் பிச்சையுடன் நழுவி பிச்சைப் பாத்திரத்தில் விழுந்தன.

அவர்கள் எல்லோரும் காதல் பித்தர்களாகி வாய்க்கு வந்தபடி சல்லாப வார்த்தைகளை பேச ஆரம்பித்தனர். தங்களது தவ வலிமையால் இதனை அறிந்தரிஷிகள், தன்னிலை மறந்த மனைவியர்களின் கற்பினையும் வளையல்களையும் கவர்ந்தவர் சிவபெருமானே என்பதை உணர்ந்தனர். கற்பு தவறி கருத்து இழந்த மனைவியரை, மதுரையில் வணிகப் பெண்களாகப் பிறக்கும் படி சபித்தனர்.

அந்த பெண்கள் தன் கணவர்களிடம் தாங்கள் மீண்டும் முனிபத்தினி பத்தினிகளாக வரம் கேட்டனர். மதுரையில் அவர்கள் வணிகப் பெண்களாக வாழும் போது சிவபெருமானின் கைப்பட்டு சாப விமோசனம் கிடைக்கும் என்றனர்.

சோமசுந்தரர் அவர்களுக்கு அருள எண்ணம் கொண்டு வளையல் வியாபாரி போல் வேடமேற்றும மதுரையில் அப்பெண்கள் வசிக்கும் தெருவில் வந்து வளையல்களின் பெருமைகளை விளக்கி கூவி விற்றார். வெளியே வந்த வணிகப் பெண்களின் கைத்தொட்டு வளையலிட்ட ஐயன் கோயிலுக்குள் சென்று லிங்கத்தில் ஐக்கியமானார். வந்தவர் சோமசுந்தரர் என்பதை உணர்ந்த வணிகப் பெண்கள் மீண்டும் முனி பத்தினிகளாகும் பாக்கியம் பெற்றனர்.

**பல்லவி**

அழகிய பிச்சாடனராய் வேடம் தரித்து தாருகா
வனத்து முனி பத்தினிகள் கற்பைச் சோதிக்கச் சென்றீர்

**அனுபல்லவி**

அழகில் வசமிழந்த மனைவிகளைக் கண்டவர்கள்
ஆடலரசர் செயல் என்றே அறிந்தனர்

**சரணம்**

கோபங் கொண்ட முனிவர்கள் தாபமுற்ற பெண்களை
வணிககுல மகளிராய் பிறந்திடவே சபிக்க
சாபம் அகன்றிட வளைவிற்கும் வணிகராகவும்
சென்றவர்கள் கையைத் தொட்டு சாபம் நீக்கினீர்